

அருப்புக்கோட்டையில் 1.152 பயனாளிகளுக்கு 1.57 கோடி மதிப்பிலான அரசு நலத்திட்டங்களை மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் தலைமையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் வழங்கினார். உடன் சேர்மன் சுப்பா ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஷாகுல் ஹமீது, முன்னாள் நகர மன்றத் தலைவர் சிவபிரகாசம், நகரச் செயலாளர் ஏ. கே.மணி, நெசவாளர் அணி பழனிச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் பாலகணேஷன், பொன்ராஜ் ஆகியோர் இருந்தனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதிக் கழக நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எப்.எம்.இராஜரெத்தினம் தலைமையில் மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் வரவேற்புரையில் அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்கள். கூட்டத்தில் என்.தில்லைசெல்வம், ஜெ.ஹெலன் டேவிட்சன், என்.சுரேஷ்ராஜன், ஏ.ஜோசப் ஸ்டாலின், ஏ.பாபு வினிபிரட், என்.தாமரைபாரதி, எம்.சிவராஜ் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதிக் கழக நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், பேரூர் மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அண்ணா பல்கலை. மாணவி விவகாரம்: தன்னைத் தானே சாட்டையால் அடித்துக் கொண்ட

# அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்தாக உள்ளது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சனம்!

சென்னை, டிச. 28-

அண்ணா பல்கலை. மாணவி விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்கின்றன, தன்னைத் தானே சாட்டையால் அடித்துக்கொண்ட, அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்தாக உள்ளது;



அரசியலுக்காக கேலிக்கூத்தான போராட்டத்தை அண்ணாமலை முன்னெடுத்துள்ளார். அண்ணாமலையின் இந்த போராட்டத்தை பா.ஜ.க. வினரே ஏற்பார்களா என்பது சந்தேகம்; அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை பா.ஜ.க. என்ன செய்து கொண்டது. தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொண்ட, பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்தாக உள்ளது என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விமர்சித்துள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரத்தில் எதிர்க்கட்சிகள் அரசியல் செய்வதாகக் குற்றம் சாட்டினார்.

தன்னைத்தானே சாட்டையால் அடித்துக்கொண்ட, பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலையின் செயல் கேலிக்கூத்தாக உள்ளதாக, அரசியலுக்காக கேலிக்கூத்தான போராட்டத்தை அவர் முன்னெடுத்துள்ள தாகவும் விமர்சித்தார்.

அண்ணாமலையின் இந்தப் போராட்டத்தை அவரது கட்சியான பா.ஜ.க. வினரே ஏற்பார்களா என்பது சந்தேகமே என்று கூறிய ஆர்.எஸ்.பாரதி, கடந்த அ.தி.மு.க. ஆட்சியின்போது அரங்கேறிய பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையின்போது பா.ஜ.க. என்ன செய்து கொண்டிருந்தது என்றும் கேள்வி எழுப்பினார்.

### அண்ணா பல்கலை. மாணவி அளித்த புகாரின் பேரில் உடனடி நடவடிக்கை!

# மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக் கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள்!

## பல்கலைக் கழகங்களில் உதவி மையங்கள் அமைக்கப்படும்!

## உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் பேட்டி!

சென்னை, டிச. 28-

அண்ணா பல்கலை. மாணவி அளித்த புகாரின் ’ பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும்,

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் மாணவ, மாணவிகளுக்கு உதவி மையம் அமைக்கப்படும் என்றும், உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள பதிவாளர் அலுவலகத்தில் உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், பல்கலைக்



கழகத்தில் மேற்கொள்ள வேண்டிய கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கல்லூரிகளின் முதல்வர்கள், பேராசிரியர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

முன்னதாக, செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் கோவி.செழியன், அண்ணா பல்கலைக்கழக மாணவி அளித்த புகாரின் பேரில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவித்தார். பாலியல் புகார் தொடர்பான விசாரணைக்கு அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வித்துறை முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாகவும், மாணவர்கள் அல்லாதவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று கூறினார்.

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் !

## அமைச்சர் தங்கம் தென்னரசு - மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் சிறப்புரை!

கன்னியாகுமரி, டிச. 28-

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் - மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆலோசனைக் கூட்டம் (26.12.2024 வியாழக்கிழமை) மாலை 4.00 மணிக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் எப்.எம். இராஜரெத்தினம் தலைமையில் நாகர்கோவில், ஒழுகினசேரியில் அமைந்துள்ள மாவட்ட தலைமை கழக அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த் வரவேற்புரையாற்றினார்.

கூட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டப் பொறுப்பு அமைச்சர், நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என். தில்லைசெல்வம், மகளிர் அணி செயலாளர் ஜெ. ஹெலன் டேவிட்சன், தணிக்கைக்குழு உறுப்பினர் என். சுரேஷ்ராஜன், மீனவர் அணி செயலாளர் ஏ.ஜோசப் ஸ்டாலின், அயலக அணி துணை செயலாளர் ஏ.பாபு வினிபிரட், வர்த்தகர் அணி இணைச் செயலாளர் என். தாமரைபாரதி, அமைப்புச் சாரா ஓட்டுநர் அணி துணைச் செயலாளர் எம். சிவராஜ் உட்பட மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி கழக நிர்வாகிகள், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள், பேரூர் மற்றும் வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் எண்: 1**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி முனையில் 133 அடி அய்யன் திருவள்ளுவர் சிலை அமைத்து 25 ஆண்டுகள் ஆனதை யொட்டி வெள்ளி விழா கொண்டாடுவதோடு, அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கும் இடையே கண்ணாடி இழை கூண்டு பாலம் அமைக்க ரூபாய் 37 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அதனை தனது பொற்கரங்களால் திறந்து வைக்கவும் கன்னியாகுமரிக்கு வருகை தரும் கழக தலைவர் முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக இக்கூட்டம் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் எண்: 2**

கன்னியாகுமரி கடல் நடுவே உள்ள பாறையில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் அய்யன் திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு 25 ஆண்டுகள் வெள்ளி விழா கொண்டாட்டத்திற்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகை தரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு 30.12.2024, திங்கட் கிழமை அன்று மதியம் 12.00 மணிக்கு கன்னியாகுமரி, அகஸ்தீஸ்வரம் பேரூராட்சிக்குட்பட்ட மகாதானபுரம் ரவுண்டானாவில் வைத்து நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையில் மாபெரும் வரவேற்பு அளித்து மாவட்டத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் எனவும், மேலும் ரூபாய் 37 கோடி செலவில் அய்யன் திருவள்ளுவர் சிலைக்கும், விவேகானந்தர் நினைவு மண்டபத்திற்கும் இடையே கண்ணாடி இழை கூண்டு பாலம் திறப்பு விழா நிகழ்ச்சிக்கும், 30.12.2024, 31.12.2024, 01.01.2025 ஆகிய நாட்களில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளிலும் கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நிதி மற்றும் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வழிகாட்டுதலின்படி பல்லாயிரக்கணக்கில் கழகத் தோழர்கள் கலந்து கொள்ள வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

## 48 வது சென்னைப் புத்தகக் காட்சி

# “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் தலைமைக் கழக வெளியீடுகள்!

**48வது சென்னைப் புத்தகக் காட்சி, நந்தனம், ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் (நந்தனம் அரசினர் கலைக் கல்லூரி அருகில்) 2024 டிசம்பர் 27 முதல் 2025 ஜனவரி 12 வரை நடைபெறுகிறது.**

**புத்தகக் காட்சி அரங்கில், அரங்கு எண்: 392ல் அமைந்துள்ள “கலைஞர் கருவூலம்” விற்பனைக் கூடத்தில் திராவிட இயக்க நூல்கள் உள்ளிட்ட தலைமைக் கழக வெளியீடுகள் விற்பனைக்கு கிடைக்கும்.**

**தலைமைக் கழகம்,**
**தி.மு.க.**

# பாம்பன் புதிய ரயில் பாலத்தின் உறுதித்தன்மை!

## அதிகாரிகள் ஆய்வு!

ராமேஸ்வரம், டிச. 28-

ராமேஸ்வரத்தில் புதிய பாம்பன் ரயில் பாலத்தின் உறுதித் தன்மை குறித்து ரயில்வே அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

பாம்பன் ரயில் பாலம் கட்டப்பட்டு நூற்றாண்டு களை கடந்துவிட்ட நிலையில், பழைய பாலம் அருகிலேயே புதிய ரயில் பாலம் கட்டப்பட்டது. பாலத்திற்கான தூண்கள், தண்டவாளங்கள், கர்டர்கள், பாலத்தின் நடுவே கப்பல்கள், படகுகள் கடந்து செல்வதற்கு தூக்குப் பாலத்தை பொறுத்தும் பணிகள், முடிந்து புதிய ரயில் பாலம் வழியாக சரக்கு ரயில் சோதனை ஓட்டமும் நிறைவடைந்தது. இந்நிலையில், பாம்பன் புதிய ரயில் பாலத்தில் ரயில்வே மூத்த துணை பொதுமேலாளர் சீனிவாசன் மற்றும் மூத்த பொறியாளர்கள் அன்பழகன், வேல்முருகன், தினேஷ் ஆகியோர் ஆய்வு செய்தனர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர்கள், புதிய ரயில் பாலத்தின் உறுதித் தன்மையில் எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறினார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை**

பூ.து.ந.க.எண்.பி2 / 2145 / 2024

**இரட்டை உறை முறையில் மின்னணு ஒப்பந்த புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**மண்டலம் - 11, வார்டு - 145ல் உள்ள நெற்குன்றம் மாதா கோயில் தெருவில் புதிய பூங்கா அமைக்கும் பணி (Two Cover System)**

**பணியின் மதிப்பு ரூ.191.17 இலட்சங்கள்**
முன்வைப்பு தொகை :- மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **09.01.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **10.01.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5672 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (பூ(ம)வி)**




திருப்பத்தூரில் நடைபெற்ற சிவகங்கை மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரை ஆற்றினார். முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், மாவட்ட அவைத் தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன், மாவட்டக் கழக துணைச் செயலாளர் த.சேங்கைமாறன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் ஆகியோர் உட்பட கழக நிர்வாகிகள் இதில் கலந்து கொண்டனர்.



துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சி கிழக்கு மண்டலத் தலைவர் கு.அகஸ்டினா கோகிலவாணி ஏற்பாட்டில் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி மாநகர கிழக்கு பகுதிச் செயலாளர் என்.பி.துரை வரவேற்புரையாற்றினார். கன்னியாகுமரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் கலந்து கொண்டு 200 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு தலா ரூ.1,000 உதவித் தொகையும், 10 பேருக்கு தையல் இயந்திரமும், ஊனமுற்ற பெண் ஒருவருக்கு சக்கர நாற்காலியும், 837 பேருக்கு 5 கிலோ அரிசி மற்றும் சேலைகளும் ஆக மொத்தம் 1048 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள். நிகழ்வில் ஜெ. ஹெலன் டேவிட்சன், ஏ.ஜோசப் ஸ்டாலின், ஏ.பாபு வினிபிரட், என்.தாமரைபாரதி, எப்.எப்.இராஜரெத்தினம், ஐ.கேட்சன், ஆர்.சதாசிவன், மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி மற்றும் வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.